**ஏமாற்றம்**

*பிரிவின் விசாலம்*
*மரணச் சித்ரவதையாய் என்னுள் ...*

*அழகிய நட்பின்*
*இறுக்கம் காண*
*வாழ்க்கை திரும்பவே இல்லை !*

*கண்ணீர்த் துளியாடையைக்*
*கட்டாத நாளில்லை*
*என் கண்கள் ;*
*நம்பிக்கைத் துரோகம்*
*செய்திராவிட்டால்*
*அவள்முகம் இன்றும்*
*நிலா*

===================

**வேரில் வெந்நீர்**

அவள் இசைவில்லாமல்
வலியைக் குறைக்க முடியுமா ?
நிச்சயம் முடியாது ; அறிவேன் !

தடுமாறி விழுந்த பின்புதான்
மனிதக்குரல் கேட்கிறது
"உதவி வேண்டுமா ? "

முழுஅன்பை இழந்த பின்னரே
அவர்களின்
துளிநடிப்பைத் தெரிந்தேன்

வாழ்வின் நோவினை
இவர்கள் கற்றுத் தராதிருந்தால்
சாவின் புனிதம்
எப்படி அறிவேன் ?

===================

**தாங்குமா இந்தப்பை ?**

என் மூச்சுப் பையின்
கனம்
நாளுக்கு நாள்
கூடுகிறது

*

வானிருந்து இறங்கும்
இடி, மின்னலை வரவேற்கும்
பூமியைப்போல்
என்முதுமை

*

வெடித்து விடுமோ
எனும் பயம்
என் உள்ளிருந்தே விரிகிறது

*

மறக்க முடியாத
துக்கத்தை
இந்தப் பையில் நானும்
சேர்த்து வைக்கிறேன்

*

உறவுகளைக் கிழிக்கும்
ஆயுதங்களுடன்
உறவினர்கள் ;
தாங்குமா இந்தப் பை ?

===================

**அந்த நேரம்**

*தலை கவிழும் போதுதான்*
*அவள் முகத்தில்*
*பௌர்ணமி*
*இறங்குகிறது*

*

*தவம்*
*கலையும் போதுதான்*
*தீக்குச்சியின் கோபம்*
*தெரிகிறது*

*

*வைக்கோல்*
*எரியும் போதுதான்*
*தன் அழகின் முழுமையை*
*வெளிக்கொணர்கிறது*

*

*இருள்*
*இறங்கும் போதுதான்*
*வேஷம் போடப் படிக்கிறது*
*வெளிச்சம்*

*

*பேசிய பின்புதான்*
*மௌனத்தின்*
*மதிப்புத் தெரிகிறது ;*

*

*மரணம்*
*விழிக்கும் போதுதான்*
*மனிதன் தூங்கி விடுகிறான்*

===================

**மனவெடிப்பு**

*வேஷம்*
*இருட்டைத்தான்*
*கொண்டுவரும்*
*வாழ்க்கையில்*

*

*எந்த வேதமும்*
*சொல்லவில்லை*
*வெளிச்சம்*
*ஒப்பனையில் இருப்பதாக*

*

*வணக்கமும் வழிபாடும்*
*எல்லாவற்றிலும் இருக்கிறது*
*நடிப்பைத் தவிர*

*

*கேள்:*
*நல்லதைப் புதைக்கும் போதே நீ*
*உன்னையும்*
*புதைத்து விடுகிறாய்*

===================


~ '*கடையநல்லூர் ஜமீலா*'
Kadayanallur Jameela

*நாகூர் மீரான் சம்சுத்தீன்*
Nagoor Meeran Samsudeen

i/c no. S1140516-I